## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.6/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிகாமணி | மதம் | : இந்து |
| த/பெ | : கண்டகன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : திருவாலங்காடு |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**08.01.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 04.11.2022ம் தேதியிட்டு பிரதிவாதிகள் எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யாத ஈடு காட்டிய அடமான பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **(ஈடு காட்டிய அடமான பத்திரம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 31.03.2005ம் தேதியிட்ட வீட்டு மனை ஒப்படைப்பு உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். **(வீட்டு மனை ஒப்படைப்பு உத்தரவு வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.11.2023ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிரதிவாதிகள் வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் தாக்கல் செய்கிறேன்.

**(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ 4 முதல் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.